**செய்தி வெளியீடு எண்: 052** **நாள்: 22.01.2020**

**செய்தி வெளியீடு**

தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் வேளாண் பெருமக்களுக்குத் தேவையான முக்கிய தகவல்களை கொண்டு சேர்ப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக, சென்ற ஆண்டில் **"உழவன்"** கைபேசி செயலியினை தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அறிமுகம் செய்யப்பட்டது. இதுவரை 5 இலட்சம் பயனாளிகள் இச்செயலியினை பயன்படுத்தி வருகின்றனர். வேளாண்மை மற்றும் இதர சகோதரத்துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் மானியத் திட்டங்கள் பற்றி அறிந்து கொண்டு, இதுவரை 88,987 விவசாயிகள் உயர் மதிப்புள்ள இடுபொருட்களை மானியத்தில் பெறும் பொருட்டு இந்த செயலியின் மூலம் முன்பதிவு செய்துள்ளனர்.

**தொடர்ந்து, பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி திட்டத்தின் கீழ் தகுதியான** விவசாயிகள் தாங்களாகவே மத்திய அரசின் **பி எம் கிசான்** வலைதளத்தில் பதிவு செய்து திட்ட பலன்களை எளிதாக பெறுவதற்கான சேவை சென்ற வாரத்தில் உழவன் செயலியில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதுபோன்று, உழவன் செயலி மூலம் விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் வழங்கவேண்டும் என்ற நோக்கத்தில், தற்போது, கூடுதலாக **எனது பண்ணைவழிகாட்டி, இயற்கைப் பண்ணையம் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் போன்ற** மூன்று சேவைகள் உழவன் செயலியில் சேர்க்கப்பட்டுள்ளன.

1. **எனது பண்ணைவழிகாட்டி சேவை:** இந்த சேவையின் மூலம், விவசாயிகள் சாகுபடி செய்யத் திட்டமிட்டுள்ள பயிர், பரப்பு, நடவு நாள் மற்றும் சாகுபடி முறையை தேர்வு செய்தால், விதைப்பு முதல் அறுவடை வரை தினசரி விவசாயிகள் அந்த பயிருக்கு மேற்கொள்ள வேண்டிய அனைத்து சாகுபடி முறைகளையும் விவசாயிகள் உழவன் செயலி மூலம் எளிதில் அறிந்து கொள்ளமுடியும்.

எனது பண்ணைவழிகாட்டி சேவை மூலம் சாகுபடிக்குத் தேவைப்படும் விதை, இரசாயன உரங்கள், களைக்கொல்லி போன்ற இடுபொருட்கள் இருப்பு பற்றிய விபரத்தையும், பயிர்க்கடன், அந்த பயிரை காப்பீடு செய்வதற்கு, விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகையையும், காப்பீடு செய்வதற்கான காலக்கெடுவினையும் விவசாயிகள் அறிந்து கொள்ளலாம். பூச்சி, நோய் தாக்குதல் ஏதேனும் தெரிந்தால், இந்த செயலியில் தரப்பட்டுள்ள புகைப்படங்களை ஒப்பிட்டுப்பார்த்தோ, அல்லது தாக்கப்பட்ட பகுதியை புகைப்படம் எடுத்து அனுப்பினால் அதற்கான கட்டுப்பாட்டு முறை விவசாயிகளின் கைபேசிக்கு குறுஞ்செய்தி அனுப்புவதற்கும் இந்த செயலியில் வசதி செய்யப்பட்டுள்ளது. அறுவடை செய்த விளைபொருட்களுக்கான சந்தை நிலவரத்தை அறிந்து, அதற்கேற்ப விற்பனை செய்து கொள்ளலாம்.

2. **இயற்கைப் பண்ணையம்:** தமிழ்நாடு அரசு இயற்கைப் பண்ணைய முறையினை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தி நச்சுத்தன்மையற்ற விளைபொருட்களை உற்பத்தி செய்வதற்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதற்காக செயல்படுத்தப்படும் பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 15,596 ஏக்கர் பரப்பில் இயற்கை பண்ணைய சாகுபடி செய்யப்பட்டு, அதில், 4,646 ஏக்கர் பரப்பிற்கு பங்கேற்பு உத்திரவாத சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பரப்பும் இயற்கைப் பண்ணைய முறைக்கு மாற்றப்பட்டு வருகிறது.

   இவ்வாறு இயற்கைப் பண்ணைய முறையில் சாகுபடி செய்யும் விவசாயிகள் பற்றி, மாநிலத்தில் உள்ள இதர விவசாயிகளும் விற்பனையாளர்களும் தெரிந்து கொள்வதற்காக, உழவன் செயலியில் பயிர் வாரியாக இயற்கைப்பண்ணைய விவசாயிகள் பெயர், விற்பனையாளர்கள் பெயர் மற்றும் தொலைபேசி எண் போன்ற விபரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அங்கக சான்றளிப்பை வழங்கும் மூன்றாம் நபர் சான்றளிப்பு முறை, பங்கேற்பு உத்திரவாத சான்றளிப்பு முறை போன்ற அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் முகவரிகளும் உழவன் செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. வேளாண்மைத்துறை மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தச் சேவையின்மூலம், இயற்கைப் பண்ணைய விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் என்பதோடு,

விவசாயிகளுக்கும் விற்பனையாளர்களுக்கும் உழவன் செயலி ஓர் இணைப்புப் பாலமாக விளங்கும்..

**3. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்:** நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், இடுபொருட்கள், நிதியுதவி, இலாபகரமான விலையில் விற்பனை செய்வதற்கான சந்தை போன்ற வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதற்காக, விவசாயிகளை ஒருங்கிணைத்து, உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளாக உருவாக்குவதற்கு தமிழ்நாடு அரசு சீரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

2014–15ஆம் ஆண்டு முதல் இதுவரை தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பினால் 130 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ஊக்குவிக்கப்பட்டுள்ளன. நபார்டு போன்ற நிறுவனங்களால் ஊக்குவிக்கப்பட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உட்பட தமிழ்நாட்டில் தற்போது 500 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வுழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், காய்கறிகள், பழங்கள், எண்ணெய் வித்துக்கள் போன்ற பல்வேறு பயிர்களை மையப்படுத்தி நிறுவப்பட்டுள்ளது. இவ்விளைப்பொருட்களை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ஒருங்கிணைத்து, சுத்தப்படுத்தி, தரம் பிரித்து, மதிப்பு கூட்டி, சிப்பம்கட்டி, தர அடையாளத்துடன் சந்தையில் விற்று வருகின்றனர்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை நல்ல முறையில் சந்தைப்படுத்துவதற்கு உதவும் வகையில், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் பற்றிய விபரங்கள் உழவன் கைபேசி செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், அங்கீகரிக்கப்பட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தாங்கள் மதிப்புகூட்டிய பொருட்களின் தரம், அளவு, விலை போன்ற விவரங்களை புகைப்படத்துடன் உழவன் செயலியில் பதிவேற்றம் செய்து சந்தைப்படுத்தி கொள்ளலாம்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மதிப்புக்கூட்டிய பொருட்களை வாங்க விரும்பும் பொதுமக்கள் இச்செயலி மூலம் தங்களுக்குத் தேவையான பொருட்களை தரமாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ளலாம். மேலும், புதிதாக இவ்வுழவன் செயலியில் பதிவேற்றம்

செய்ய விரும்பும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உங்கள் பகுதியில் உள்ள வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை துணை இயக்குநரை அணுகி பயன்பெறலாம்.

தற்போது, உழவன் கைபேசி செயலியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இம்மூன்று சேவைகள் மூலம், வேளாண் பெருமக்கள் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வேளாண் உற்பத்தி ஆணையர்**

**(ம) அரசு முதன்மைச் செயலாளர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**